
ஆவின்
தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம்
பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை
அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய
பொது மேலாளர்கள் மற்றும் அனைத்து துணைப்பதிவாளர்கள் (பால் வளம்)
பணிகள் ஆய்வுகூட்டம்
தலைமை
நாள் : 08-10-2022
PREMIER



உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய
அனைத்து துணைப்பதிவாளர்கள் (பால் வளம்)
ஆய்வுகூட்டம்
தலைமை
இடம் : ஆவின் இல்லம்,
நந்தனம், சென்னை.
PREMIER



# செய்தி வெளியீடு

தேதி: 08.10.2022

**தீபாவளியை முன்னிட்டு பால் கொள்முதலை அதிகரிக்க மற்றும் தமிழகம் முழுவதும் பால் மற்றும் பால் உப பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்க மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்.**

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.சா.மு.நாசர் அவர்கள் தலைமையில் ஆவின் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத்துறை, மாவட்ட துணைப்பதிவாளர்கள் (பால்வளம்), அனைத்து மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பொது மேலாளர்களின் பணிகள் மற்றும் தீபாவளி சிறப்பு இனிப்புகள் விற்பனை குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னை ஆவின் தலைமை அலுவலகத்தில் 08.10.2022 அன்று காலை 10.00 மணி அளவில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் நிலுவையில் உள்ள தணிக்கை அறிக்கை மற்றும் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து மாவட்ட வாரியாக துணைப்பதிவாளர்கள் (பால்வளம்) மற்றும் ஒன்றிய பொது மேலாளர்களுடன் விரிவான விவாதம் மேற்கொண்டார். தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை விரைவில் நிவர்த்தி செய்ய உத்தரவிட்டார்.

பால் மற்றும் பால் உபபொருட்களின் கடந்த மூன்று மாதங்கள் (ஜுலை, ஆகஸ்ட், செப்டம்பர்) விற்பனை விபரத்தினை ஒப்பிட்டு குறைந்த விற்பனை மேற்கொண்ட ஒன்றியங்களுக்கு விற்பனையை அதிகரிக்க தகுந்த நடவடிக்கைகள் எடுக்க அறிவுறுத்தினார்.

பால் கொள்முதல் குறைந்து வருவதை மேற்கொள் காட்டி மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்கள் பால் கொள்முதலை அதிகரிக்க அனைத்து மாவட்ட துணைபதிவாளர்கள் மற்றும் ஒன்றிய பொது மேலாளர்களுக்கு தேவையான நடவடிக்கை எடுக்கவும், பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களுக்கு குறித்த நேரத்தில் பணம் பட்டுவாடா செய்யவும் ஆலோசனை வழங்கினார்.

மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளவும் மற்றும் தமிழகம் முழுவதும் பால் மற்றும் பால் உப பொருட்கள் அனைத்து இடங்களிலும் தங்கு தடையின்றி கிடைக்க வழிமுறைகள் வகுக்கப்பட்டு, கூடுதல் வாகனங்கள் மூலம் உடனுக்குடன் பால் விநியோகிக்கவும் ஆலோசனை வழங்கினார்.

துணை பதிவாளர்கள் (பால்வளம்), பொது மேலாளர்கள் மற்றும் அனைத்து அதிகாரிகளும் பால் கொள்முதல் மற்றும் குளிரூட்டும் மையங்கள், பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள், பால் மற்றும் பால் உப பொருட்கள் உற்பத்தி மையங்கள், விற்பனை மையங்கள், போன்ற அனைத்து இடங்களுக்கும் நேரில் சென்று ஆய்வு செய்யவும், குறைகளை தீர்க்கவும் வலியுறுத்தினார்.

தீபாவளி சிறப்பு இனிப்புகள் தயாரிப்பு பணிகள் மற்றும் தேவையான உபகரணங்கள், மூலப்பொருட்கள், பேக்கிங் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்ட விவரங்களை கேட்டறிந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட தீபாவளி விற்பனை இலக்கினை அடைய இணையம் மற்றும் அனைத்து மாவட்ட ஒன்றிய பொது மேலாளர்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் பால்வளத்துறை ஆணையர் மற்றும் மேலாண்மை இயக்குநர் மருத்துவர்.ந.சுப்பையன் இ.ஆ.ப., அவர்கள், அனைத்து மாவட்ட துணை பதிவாளர்கள் (பால்வளம்), மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றிய பொது மேலாளர்கள், மற்றும் ஆவின் உயர் அதிகாரிகள், அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

8/10/22

for மேலாண்மை இயக்குநர்
த.நா.பா.உ.கூ.இணையம்

**பொதுமக்கள் தங்களின் கருத்துக்களை பதிவு செய்ய ஆவினின் @AavinTn முகநூல், ட்விட்டர் மற்றும் இன்ஸ்டாக்ராம் ஆகிய சமூக வலைத்தளங்களையும், மேலும் கூடுதல் தகவல்களுக்கு 18004253300 என்ற அலைபேசி எண்ணை 24X7 தொடர்பு கொள்ளலாம்.**